**மத்திய அதிவேகப் பாதைச் செயற்திட்டம் - பகுதி II - 2017**

மத்திய அதிவேகப் பாதைச் செயற்திட்டம் - பகுதி II இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்களாக முறையே தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் காணப்படுகின்றன. வாகன பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு கிரயம் ஆகியவற்றினை குறைத்தல், போக்குவரத்து நேரம், விபத்து மற்றும் பொருளாதார அபிவிருத்தி சமூக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பயணிகள் முயற்சி போன்றவற்றினை கொண்ட மீரிகம தொடக்கம் குருநாகல் வரையான அதிவோப்பாதை பகுதியின் 39.29 கிலோமீற்றர்களினை நிர்மானிப்பதனூடாக பகுதிகளுக்கிடையில் உயர் இயக்கத்தினை உறுதிசெய்தல் போன்றன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நெடுஞ்சாலையின் நிர்மான வேலைகள் 04 பகுதிகளாக பிரிக்கப்பட்டு உள்நாட்டு ஒப்பந்ததாரரின் கூட்டமைப்பு ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 148,520 மில்லியனானதுடன் அதனை உள்நாட்டு அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் உள்நாட்டில் செயற்படும் சர்வதேச வங்கிகள் என்பவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினூடாக இலங்கை பொதுதிறைசேரியினால் நிதியளிக்க தீர்மானிக்கப்பட்டது. ஓப்பந்த உடன்படிக்கையானது 2016 திசெம்பரில் கையொப்பமிடப்பட்டிருந்தது மேலும் செயற்பாடுகள் 2017 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2019 ஜூலையில் பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீதான இழப்பீடுகள் மீதான வட்டி மொத்தமாக ரூபா 334.50 மில்லியன் நிதிக்கூற்றக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், சிவில் நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தவேண்டிய தொகை மொத்தமாக ரூபா 292 மில்லியன் கூட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|
| | | | மீளாய்வு ஆண்டின் போது | 2017 திசெம்பர் 31 வரை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஜீஓஎஸ்எல் | - | 2,140 | 1,115.50 | 1,259.80 |
| மக்கள் வங்கி | 12,000.00 | - | 12,000.00 | 12,000.00 |
| தேசிய சேமிப்பு வங்கி கடன் | 13,017.70 | - | 13,017.70 | 13,017.70 |
| சம்பத் வங்கி | 5,837.50 | - | 5,837.50 | 5,837.50 |
| மொத்தம் | 30,855.20 | 2,140 | 31,970.70 | 32,115.00 |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்த ஒப்பந்த பெறுமதியில் 01 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 345.90 மில்லியன் அல்லது அதிலும் கூடிய இடைக்கால கொடுப்பனவு சான்றிதல் பெறுமதி ஒபபந்த நிபந்தனைகளின் உபபிரிவு 14.6 இன் பிரகாரம், மதிப்பீட்டிற்கும் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் அத்தாட்சிக்கும் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 128.2 மில்லியன் தொடக்கம் 292.2 மில்லியன் வரையான வீச்சிலான பெறுமதியுடைய இடைக்கால கொடுப்பனவு சான்றிதல் மீளாய்வாண்டின் போது 04 நிகழ்வுகளில் மதிப்பீடு செய்யப்பட்டமை மேலே குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டிற்கு மாறாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முறையான நிலத்தள நிலஅளவை ஆரம்பகட்டத்தில் செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிராததுடன் 57+000 கிலோமீற்றர்கள் தொடக்கம் 62+330 கிலோமீற்றர் வரை மற்றும் 63+950 கிலோமீற்றர் தொடக்கம் 69+500 கிலோமீற்றர் போன்றவற்றில் அமைந்துள்ள பாறைகள் உரிய ஒப்பந்ததாரரினால் தோண்டுவதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, 267,828 எம்$^3$ உலோகம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 170,909$m^3$ மாத்திரமே வீதி நிர்மான நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தப் பொதி 04 இன் கீழான வீதி நிர்மான நோக்கத்திற்கான தளங்கள், காணி சுவீகரிப்பில் தாமதம், வேலைப்பரப்பு மற்றும் வடிவமைப்புக்கள் மற்றும் பலவற்றில் மாற்றம் போன்ற பல்வேறு காரணங்களினால் தாமதத்துடன் கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், மொத்தமாக ரூபா 15,217.8 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ஒப்பந்ததாரரிற்கு மேலதிக நிதி வருவாயிற்கு வழிவகுப்பதனூடாக, மிளாய்வாண்டின் போது காலாண்டடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்தப்பொதி 03 இன் கீழ் வீதி நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரர்கள் 2019 சனவரி 10 இலான வெளிக்கல விஜய திகதியின் போது கூட வீதி நிர்மான வேலைக்காக தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) ஆரம்ப கட்ட வீதி நிர்மான திட்டங்களின் பிரகாரம், நிர்மானிக்க பட்டியலிடப்பட்டிருந்த 5.11 கிலோமீற்றர்களின் வழி குழாய் பாலங்கள் மற்றும் 123 நிலக்கீழ் பாலங்கள் முறையான நீர்வள கற்கைகளை செய்யாமல் 8.9 கிலோமீற்றர்களின் வழி குழாய் பாலங்கள் மற்றும் 167 நிலக்கீழ் பாலங்கள் வரை அதிகரிக்கப்பட்டிருந்தன. மேலும், உரிய மாற்றங்களிற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்பாசனம் மற்றும் விவசாய அமைப்புக்கள் திணைக்களம் மற்றும் பல போன்றவற்றிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.